**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம்- III இன் 2013**

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் III இன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த செயற்திட்டமானது. இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்தி வெளிசுற்று வட்டச் நெடுஞ்சாலையின் கடவத்தை முதல் கெரவலபிட்டிய வரையான 9.32 கிலோமீற்றர் வீதிப் பிரிவினை நிர்மாணிப்பதற்கு அமுலாக்கப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிற்கு நிதியளிப்பதற்கு 2014 செப்தெம்பர் 16 இல் சீனா எக்சிம் வங்கியுடன் இலங்கை அரசாங்கத்தால் கடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், நெடுஞ்சாலைகள், உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது.

செயற்திட்டத்தின் குறிக்கோள்களாவன,

(அ) கொழும்பு பெரும்பாக பிராந்தியத்தில் வாகன நெரிசலைக் குறைக்கும் நோக்கில் கொழும்பு நகரத்திலிருந்து தெற்கு அதிவேகப்பாதை மற்றும் ஏனைய தேசிய வீதிகள் என்பவற்றுடன் இணைந்த கொழும்பின் வெளிப்புறத்தில் அதிவேகப்பாதையில் நிர்மாணிப்பதற்கும் அதன் மூலம் நாட்டின் ஏனைய பிராந்தியத்துடன் தொடர்பை உயர்த்துவதற்கும்,

(ஆ) கொழும்பு பெரும்பாக பிராந்தியத்தில் வாகன நெரிசலைக் குறைப்பதற்றும் இலங்கையிலுள்ள பிராந்தியங்களிற்கு இடையில் பொருளாதார ஏற்றதாழ்வுகளை வலுப்படுத்தி அதன்மூலம் பங்களிப்பு செய்வதற்கு பிரதான வீதிகள் மற்றும் தெற்கு நெடுஞ்சாலை என்பவற்றுடன் இணைந்த கொழும்பின் வெளிப்புறத்தில் நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதற்கும் அதன் மூலம் நாட்டின் ஏனைய பிராந்தியத்துடன் தொடர்பை உயர்த்துவதற்கும்,

2013 சனவரி 21 இல் நடைபெற்ற கூட்டத்தில் செய்யப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது ரூபா 66.7 பில்லியன் கிரயத்தில் 42 மாதங்களிற்குள் வீதிப் பிரிவின் நிர்மாண வேலைகளை

பூர்த்தியாக்குவதற்கு 2013 பெப்ரவரி 22 இல் சீன மக்கள் குடியரசின் ஒப்பந்தகாரருடன் ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்குவதும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள்

சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாகக் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

## 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 1,205,886,641 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினத்தின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் |
|---|---|
| | ரூபா |
| காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றம் | 1,189,616,518 |
| செயற்திட்ட முகாமைத்தவம் | 12,054,796 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 4,215,327 |
| | 1,205,886,641 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து காசுப் பாய்ச்சல் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வட்டி மற்றும் இழப்பீட்டு கொடுப்பனவுகளில் வழங்கப்பட்ட ரூபா 10,701,484 தொகையான காசோலைகள் இரத்துசெய்தலை பதிவுசெய்வதற்கு கணக்குகளில் அவசியமான சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

**5.2 கணக்காய்விற்கான ஆவணரீதியான சான்றுகள் இன்மை**

(அ) பல்வேறு நோக்கங்களில் செய்யப்பட்ட ரூபா 4,397,508 தொகையான முற்பணங்கள் ஆதாரமாண ஆவணங்கள் இல்லாமல்மீள்குடியேற்றத்திற்கும் வேலைத்தள செலவினக் கணக்கிற்கும் மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 285,265,900 கூட்டு மொத்தத் தொகையான இழப்பீடுகளில் செய்யப்பட்ட வட்டி தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்**

**6.1 நிதிப் பயன்பாடு**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்ட நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 1,206 மில்லியன் தொகையான பங்களிப்புகளை பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 2,073 மில்லியன் தொகையான ஏற்பாடு நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் கீழ் 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்டிருந்தது.

**6.2 வீதி நிர்மாணத்தின் பௌதீக முன்னேற்றம்**

2013 பெப்ரவரி 22 இல் ஒப்பந்தகாரரிற்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் இடையில் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது தொடங்கப்பட்டிருக்கவில்லை.

**6.3. காணிச் சுவீகரிப்பு மீள்குடியேற்ற நடவடிக்கைகளும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 வரையும் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்ட கடவத்தையில் அமைந்துள்ள 2.48 ஹெட்டெயர் பரப்பளவுள்ள காணியை பிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணி சுவீகரிப்பதற்காக இழப்பீட்டு கொடுப்பனவுகளிலுள்ள தாமதம் காரணமாக ரூபா 298,605,978 கூட்டுமொத்தத் தொகையான வட்டி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) 2007 பெப்ரவரி மாதத்தில் வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம் - கட்டம் II ஆல் சுவீகரிக்கப்பட்ட 2.6348 ஹெட்டயர் பரப்பளவுள்ள வத்தளையில் ஹீன்கெந்த மில்லகெவத்தே காணி இடம்பெயர்ந்த நபர்களிற்கிடையில் பிரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அன்றிலிருந்து பயனற்றிருந்தது. மேலும், முழுக் காணியும் 57 குண்டுகளிற்குள் பிரிக்கப்பட்டிருந்ததுடன் 26 துண்டுகள் மாத்திரம் இடம்பெயர்ந்த நபர்களால் வேண்டப்பட்டிருந்தது.

(ஈ) 2011 ஆம் ஆண்டில் வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம் - கட்டம் II ஆல் கடவத்தையில் ஜயசுமன என அமைக்கப்படும் இன்னொரு காணி சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் காணியைச் சுற்றி வேலி அமைப்பதற்கு இந்த செயற்திட்டத்தால் ரூபா 377,077 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணியில் இடம்பெயர்ந்த நபர்களை குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நெடுஞ்சாலையின் நிர்மாணத்திற்காக செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்ட காணியின் பெறுமதியை இழப்பீடு செய்வதற்கு மத்துமகல கருநாரத்னே பௌத்த மஹா வித்தியாலத்திற்கு சொந்தமான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செயற்திட்டத்தால் ரூபா 53,453,560 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணியின் உரித்துறுதி அனுமதிக்கப்பட்ட கட்டிட படம், ஏனைய உரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. செயற்திட்டத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகளில ் இருக்கின்ற கட்டிடத்தை இடிப்பதற்கு கல்விப் பணிப்பாளர் உடன்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திலிருந்து இழப்பீடுகளை பெற்ற பின்னர் ஆறு மாத கலத்திற்குள் செயற்திட்டத்திற்கு காணியை வெற்றிடமாக கையளிக்கப்படட வேண்டிய போதிலும் கட்டிடமானது இடிக்கப்பட்டிராததுடன் இழப்பீட்டு கொடுப்பனவு திகதியிலிருந்து 09 மாதங்கள் கடந்த பின்னரும் செயற்திட்டத்திற்கு காணியை கையளிக்கப்படாமல் இருந்தது. மேலும், நான்கு மாடி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான கட்டிட வரைபடம் பின்னர் தன்னிச்சையான மூன்று மாடிக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. அரசாங்க கொள்வனவு வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மேல் மாகாண கல்வி திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட மூன்று ஒப்பந்தகாரரிடமிருந்து வரையறுத்த கேள்விகள் கோரப்பட்டிருந்தது.

## 6.4. மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஏப்ரல் 05 இலிருந்து செயற்படும் வண்ணம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் செயற்திட்டத்தின் பதவியணி அனுமதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கட்டம் III இற்கான செயற்திட்ட கண்காணிப்பு பிரிவின் செயற்பாடுகள் ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து விடுவிக்கப்பட்ட 26 உத்தியோகத்தர்களுடன் 2013 நவம்பர் 05 இலிருந்து தொடங்கப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 07 ஆந் திகதிய டிஎம்எஸ் 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மீள்குடியேற்ற உதவியாளர் படிகளிற்கு தகுதியற்றிராதவருக்கு ரூபா 80,985 தொகையான படிகள் செலுத்தப்பட்டிரந்தது.

(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் உள்ளூர் ஆலோசனையாளருக்கான பதவியணி அனுமதிக்கப்பட்டிருக்காத போதிலும், செயற்திட்டமானது 09 உள்ளூர் ஆலோசனையாளர்களை சேர்த்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவர்களிற்கு ரூபா 200,000 தொகை செலுத்தியிருந்தது.